# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு

24—12—49 முதல் 27—12—49 வரை

சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடந்த

## தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்ட

## அறிக்கை

*1949*

தமிழ் இசைச் சங்கம், சென்னை.



தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்டம்
சென்னை மெமோரியல் மண்டபம்.
24—27 டிஸம்பர் 1949.

GOVERNMENT ... TRIPLICANE P.O., MADRAS 14 SEP 1953

## தமிழ் இசைச் சங்கம், சென்னை.



டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியார். இசையரசு எம் எம். தண்டபாணி தேசிகர்,
பேராசிரியர் ஸாம்பமூர்த்தி ஐயர், திரு. எம். பி. பெரியசாமிதூரன்.

தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்டம்

சென்னை மெமோரியல் மண்டபம்.

24—27 டிஸம்பர் 1949.

# தமிழ் இசைச் சங்கம்

## தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு

24—12—49 முதல் 27—12—49 வரை

சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடந்த

## தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்ட அறிக்கை

---

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தார், இசைத்தமிழ் ஆராய்ச்சி நடத்துவதற்குக் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவை அமைத்தார்கள்.

1. டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார், பி. ஏ., பி. எல்., (தலைவர்)
2. திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார் (தமிழ் இசைச் சங்கக் கௌரவ காரியதரிசி)
3. திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ.,பி.எல்.
4. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ.,பி.எல்.
5. திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி
6. திரு. ம. ப. பெரியசாமித் தூரன், பி.ஏ.,எல்.டி.
7. இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்
8. பேராசிரியர் திரு. பி. ஸாம்பமூர்த்தி, பி.ஏ.,பி.எல்.
9. இசைமன்னர் சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை
10. திரு. டி. என். சாமிநாத பிள்ளை
11. சங்கீத கலாநிதி திரு. கே. ராஜமாணிக்கம் பிள்ளை
12. திரு. பி. எஸ். வீருசாமி பிள்ளை
13. திரு. க. பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை
14. பண்டித வித்துவான். திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் (செயலாளர்)

இக் குழுவினர், டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள் தலைமையில், 25-11-49ல் சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தில் கூடி, '' இசைத் தமிழ்ப் பழஞ் செல்வங்களாகிய தேவாரப் பண்கள் தொடக்கத்தில் ஒரே முறையில்தான் பாடப் பெற்றிருக்கும்; பின்பு காலஞ் செல்லச் செல்ல மக்கள் பல வகைகளில் பாடத் தொடங்கி விட்டனர்; அவ்வாறு பல வகையாகப் பாடுபவர்களைக் கூட்டிப், பாடிக் காட்டவும், ஆராயவும் செய்து, பழைய முறையைக் கண்டு, அம் முறையை எங்கும் பரப்ப எல்லா முயற்சியுஞ் செய்யவேண்டும் '' என்று முடிவு செய்தனர்.

**ஆராய்ச்சிக் கூட்டம் பற்றிய நடைமுறைகளைக் கவனிக்க,**

1. திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார்
2. இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்
3. திரு. எம். பி. பெரியசாமித் தூரன், பி.ஏ.,எல்.டி.
4. பேராசிரியர் திரு. பி. ஸாம்பமூர்த்தி, பி.ஏ.,பி.எல்.
5. திரு. டி. என். சாமிநாத பிள்ளை
6. பண்டித வித்துவான். திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் (செயலாளர்)

ஆகியோர் அடங்கிய உட்குழு நியமிக்கப் பெற்று, அக் குழு, அடையாறு செட்டிநாடு ஹவுஸில் திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்கள் வீட்டில் 27-11-49, 18-12-49-ஆம் தேதிகளில் கூடிப் பல முடிவுகளைச் செய்தது.

அம் முடிவுகளின்படி 24-12-49 முதல் 27-12-49 வரை சென்னை மெமோரியல் மண்டபத்தில் ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்றது.

1. சிதம்பரம் திரு. கே. இலக்குமண ஐயர்
2. திருக்களர் திரு. டி. சுப்பையா தேசிகர்
3. காஞ்சிபுரம் திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்
4. தருமபுர ஆதீனத்தின் பிரதிநிதி திரு. டி. வேலாயுத ஓதுவார்
5. திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார்
6. மதுரை திரு. வி. சுப்பையா ஓதுவார்
7. சென்னை திரு. சி. அப்பாசாமி ஓதுவார்
8. அண்ணாமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார்
9. திருக்கடவூர் திரு. தி. சாமிஐயா தேசிகர்
10. கும்பகோணம் திரு. ப. சுந்தரேசன்
11. தேவகோட்டை திரு. ஆர். கணேச பிள்ளை
12. திருச்சேறை திரு. சொ. சட்டநாத தேசிகர்

ஆகிய ஓதுவார்களும்,

சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை
திரு. எம். கே. தியாகராஜ பாகவதர்
திரு. டி. ஆர். வேணுகோபால் நாயுடு
திரு. க. பொ. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை

முதலிய இசைவாணர்களும்,

ராஜா சர். திரு. மு. அ. முத்தையா செட்டியார்
திவான்பகதூர் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்
திவான்பகதூர் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை
நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை
திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார்
கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி
திரு. ம. ப. பெரியசாமித் தூரன்
திரு. ஆ. அ. வரகுண பாண்டியன்
திரு. ஆ. மு. முருகப்ப செட்டியார்
ராவ்பகதூர் திரு. டி. எஸ். கச்சாபகேச முதலியார்
திரு. மு. அ. சிதம்பரஞ் செட்டியார்

முதலிய பெரியோர்களும் கூட்டத்திற் கலந்து கொண்டனர்.

இன்னும் பல இயற்றமிழ் இசைத்தமிழ்ப் புலவர்களும், பல தமிழ் அன்பர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள், கடவுள் வாழ்த்துப் பாடினார்கள்.

தமிழிசைவிழாவின் வரவேற்புக் கழகத் தலைவர் திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள், கூட்டத்திற்கு வந்திருந்த அன்பர்களுக்கு நல்வரவு கூறினார்கள்.

டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்கள், கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ் இசைச் சங்கம், சென்னை.



தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்டம்
24—27 டிஸம்பர் 1949.

முதல்நாள் கூட்டத்திற்குத் திரு. பி. ஸாம்பமூர்த்தி அவர்களும், இரண்டாம் நாள், மூன்றாம் நாள், நான்காம் நாள் கூட்டங்களுக்குத் திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களும் தலைமை தாங்கினார்கள்.

கூட்ட நிகழ்ச்சிகள் பின் வருமாறு—

## முதல்நாள் நிகழ்ச்சி

(24-12-49 சனிக்கிழமை காலை 11 மணி முதல் 1 மணி வரை.)

### டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்களின் தொடக்க உரை

இந்த ஆராய்ச்சிக் கூட்டத்தைத் தொடங்கி வைக்க எனக்கு என்ன அருகதை இருக்கிறதென்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். இசைக் கலையில் எனக்கு ஆனா ஆவன்னாகூடத் தெரியாது. மேல் நாடுகளிலே ஒரு பழக்கமுண்டு. பெரிய கால்பந்து (Foot ball) விளையாட்டுப் பந்தயங்களை ஆரம்பித்து வைப்பதற்கு அந்தந்த ஊரில் முக்கியமானவரை அழைத்து முதன்முதலாகப் பந்தைக் காலால் தள்ளிவிடச் சொல்வார்கள்; இந்தப் பணியைச் செய்யும் பெரியார் கால்பந்து விளையாட்டில் நிபுணராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அதுபோலவேதான் இசை நுணுக்கம் அறியாத நானும் ஆர்வம் இருக்கின்ற காரணத்தால் இந்த ஆராய்ச்சிக் கூட்டத்தைத் தொடங்கி வைக்கிறேன்.

நம் முன்னோர்கள் நமக்குத் தந்துள்ள இசைச் செல்வத்தை—அதன் பெருமையை—யாவரும் உணரும்படி செய்வதே இவ்வாராய்ச்சிக் கூட்டத்தின் நோக்கம்.

தமிழ் இசை இயக்கம் தோன்றியதிலிருந்து இனிய தமிழிலேயே இசையரங்குகள் அமைத்துத் தமிழர்களின் உள்ளத்தை நாம் கவர்ந்திருக்கிறோம். இந்த இசைஇயக்கத்தின் உருவான நல்ல முயற்சியை இன்று நாம் கையாளப் போகிறோம்.

முதலில் எதைக் குறித்து ஆராயலாம் என்று கருதினோம். இசையின் உயிர் நாடியான பண்களைப் பற்றி ஆராய்வதென்ற முடிவுக்கு வந்தோம். அதிலும் தேவாரப் பண்களை முதலில் ஆராய்ந்து திட்டப்படுத்துவது அவசியம் என்று கண்டோம். அதன்படியே தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் தேவாரப் பண் இசைக்கும் பாடகர்கள் பலரை இங்கு வரவழைத்துள்ளோம்.

தேவாரப் பாடல்கள் சிறந்த சங்கீதத்திற்கு ஏற்றவையல்ல என்று யாராலும் கூற முடியாது. பண் என்ற அருமையான சொல்லையும், பல பண்களின் பெயர்களையும் நாம் தேவாரங்களின் மூலமாகத்தான் அறிந்து கொண்டோம். தேவாரம் உயர்ந்த இசை நயமும், நுணுக்கமும் வாய்ந்தது. சம்பந்தரின் பாடலுக்கு விதிப்படி யாழ் வாசிக்க இயலாமல் திருநீலகண்டயாழ்ப்பாணர் என்னும் சிறந்த யாழிசைவாணர் தம் யாழையே முறிக்கத் தொடங்கி விட்டார் என்று வரலாறு கூறுகிறது. திட்ப நுட்பம் வாய்ந்த செந்தமிழ் இசை நயம் தேவாரத்தில் ஒளிர்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

"உலகத்திலேயே முதன் முதலில் நம் நாட்டிலேதான் இசை என்ற ஒரு கலை சிறந்து விளங்கிற்று. மேல் நாட்டு இசைகளெல்லாம் இங்கிருந்து ஏற்றுமதியான இசையை—அதன் உருவை—முறையைக் கூட்டியும் குறைத்தும் நொறுக்கியும் சிதைத்தும் உருவாக்கப் பட்டவையே". இதுதான் நண்பர் டி. கே. சி யின் முடிவு.

கர்நாடக சங்கீதம் வேறு, தமிழிசை வேறு என்ற போலி வாதத்திற்கு இனி இடமே யில்லை. கர்நாடக சங்கீதத்திற்குத் தமிழிசை ஏற்றதன்று என்றால் கர்நாடக சங்கீதம் என்பது எங்கிருந்துதான் முளைத்தது என்று தெரியவில்லை. கர்நாடக சங்கீதம் என்பது பழமையான இசை; எனவே அது தமிழிசையை அடிப்படையாகக் கொண்டுதான் எழுந்திருக்கவேண்டும் என்பது திண்ணம்.

பண்ணோடு சேர்ந்த இசை, மக்களது உள்ளத்தைத் தொடும்படியான ஒரு கலை. பண்ணை மூன்றாகப் பிரித்துள்ளார்கள். அவை, பகல்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பெயர் பெறுகின்றன; இவற்றின் தன்மையையும், அமைப்பு முறையையும் நாம் ஆராயவேண்டியது அவசியம்; இந்த ஆராய்ச்சியின் பயனாகத் தமிழர்களுக்குத் தேவார இசையில் ஒரு புதிய ஊக்கம் ஏற்படும் என்று நம்புகிறேன். இக் கூட்டத்திற் கலந்து கொள்ளும் அன்பர்கள் அனைவரும் தத்தம் கருத்துக்களைத் தெளிவாகத் தாராளமாகச் சொல்லலாம். எல்லோரும் நல்ல முறையில் ஆராய்ந்து முடிவு காணவேண்டும். தமிழிசை வளர்ச்சிக்கு இக் கூட்டம் மிகுந்த பயனைத் தரும் என்ற மகிழ்ச்சியோடு ஆராய்ச்சியைத் தொடங்கி வைக்கிறேன். பேராசிரியர் ஸாம்பமூர்த்தியவர்கள் இன்றைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவைத் தொடங்குவார்களாக.

பின்னர், பேராசிரியர் திரு. பி. ஸாம்பமூர்த்தியவர்கள், "பண் ராக ஆராய்ச்சி" பற்றியும், திரு. ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள் "பண் வரலாறு" பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். (இவை அச்சிட்டு வழங்கப் பெற்றன.)

"தோடுடைய செவியன்" என்னுந் தேவாரத்தைப் பாடகர்கள் வெவ்வேறு பண்களிற் பாடுகின்றனரென்றும், அப்பாடலுக் கேற்ற சிறந்த பண் எதுவென்பதை முதன்முதலாக ஆராய வேண்டுமென்றும், அப்பாடல் அனைவர்க்கும் தெரிந்த வொன்றாகையால் அதனைக் கொண்டு ஆராய்ச்சியைத் தொடங்குவது எளிது என்றும் திரு. பி. ஸாம்பமூர்த்தி சொல்லித், திருக்களர் திரு. டி. சுப்பையா தேசிகரை அப்பாடலைப் பாடுமாறு கேட்டுக் கொண்டார்.

## நட்டபாடை

"தோடுடைய செவியன்" என்ற பாடலுக்குரிய பண்ணின் பெயர் நட்டபாடை; அந்த நட்டபாடை என்பது நாட்டையா? கம்பீரநாட்டையா? நாட்டைக் குறிஞ்சியா? என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டியதாயிற்று.

திரு. டி. சுப்பையா தேசிகர், மேற் கண்ட பாடலை, நாட்டையில் ரூபக தாளத்தில் பாடினார். அவர் பாடிய பாணியில் கம்பீரநாட்டையின் சாயல் படர்ந்துள்ள தென்று திரு. பி. ஸாம்பமூர்த்தி தெரிவித்தார். இதனைச் சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை மறுத்தார்.

மற்றைய பிரதிநிதிகளின் கருத்து, பின் வருமாறு—
சிதம்பரம் திரு. கே. இலக்குமண ஐயர்:—நட்டபாடை யென்பது நாட்டை ராகமே. இது என்னுடைய நீண்ட கால அனுபவத்திற் கண்ட உண்மை.

காஞ்சிபுரம் திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:—தேவாரத்தை முறையாகத் திருநெல்வேலி முதலான இடங்களிற் கர்ண பரம்பரை

யாகப் பண்ணோடிசைத்துப் பாடி வந்த உண்மை பலருக்கும் தெரியும். அந்தத் தொன்மையான முறையிலிருந்து "தோடுடைய செவியன்" என்னும் இப் பாடலுக்குரிய ராகம், நாட்டைக் குறிஞ்சியே என்பது தெரியவரும். என் ஆசிரியராகிய திரு. சுந்தர ஓதுவா மூர்த்தியவர்களும் இப் பாடலை நாட்டைக் குறிஞ்சியிலேயே திட்டவட்டமாகப் பாடிவந்தார்கள். எனவே நட்டபாடை என்பது நாட்டைக் குறிஞ்சியே.

**கும்பகோணம் திரு. ப. சுந்தரேசன்:**—நட்டபாடை என்பது நாட்டைக் குறிஞ்சியே. நாட்டையோ கம்பீர நாட்டையோ அன்று. யாழ்நூல் கண்ட விபுலாநந்த அடிகளார் இதனை மிக நன்றாக ஆராய்ந்து முடிவு செய்துள்ளார்கள். எனக்கு அவகாசம் கொடுத்தால் யாழ் நூலைக் கொண்டும், பிற தக்க ஆதாரங்களைக் கொண்டும், சுரதாளக் குறிப்புகளுடன் நட்டபாடை என்பது நாட்டைக் குறிஞ்சி என்பதை நிரூபித்துக் காட்ட முடியும்.

"நைவளம் என்பது நட்டபாடை"

"நைவளம் நயந்தெரி பாடலும்" என்பன போன்ற குறிப்புக்களைக் கொண்டு ஆராய்ந்தால் இம் முடிவு காணலாம்.

ஹரிகாம்போதிக்குச் செம்பாலை என்று பெயர். ஹரிகாம்போதியில் ஜன்னியமானது நட்டபாடை. எனவே நட்டபாடை, நாட்டையன்று; நாட்டைக் குறிஞ்சியே.

**திரு. எஸ். இராமசாமி நாயுடு:**—பாடும்போது பக்க வாத்தியங்கள் இல்லாமலிருந்தால் நல்லது; பண்ணின் நயத்தைத் தெளிவாக உணரலாம் என்று கூறினர்.

**திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார்:**—பக்கவாத்தியங்கள் இருப்பதால் குற்றமில்லை; அவை இருந்தால்தான் பாடகர்களுக்கு ஊக்கமாக இருக்கும் என்றார்.

பின்னர், அதே பாடலைத் திரு. டி. சுப்பையா தேசிகர், ஆதி தாளத்திலும், திரு. கோ. சாரங்கபாணி செட்டியார், திருபுடை தாளத்திலும் பக்க வாத்தியங்களுடன் பாடிக்காட்டினார்கள். திரு. கே. இலக்குமண ஐயர், அப் பாடலை ஜம்ப தாளத்தில் இசைத்துக் காட்டினர்.

**திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார்:**—ஆதி தாளத்திலும் பாடலாம் என்று குறிப்பிட்டார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:**—முதலில் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சி நட்டபாடை என்பது நாட்டையா? அல்லது நாட்டைக் குறிஞ்சியா? என்பதுதான்; அதனைத் தீர்மானித்த பின்னர்த் தாளத்திற்கு வரலாம் என்றார்.

இதனைத் திரு. பி. ஸாம்பமூர்த்தி ஆமோதித்தார். பின் திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார், தம் பாணியில் மேற்கண்ட பாடலை இசைத்துக் காட்டினர். அப்போது திரு. பி. ஸாம்பமூர்த்தி, ஒரு ராகத்தைப் பாடும்போது சிறிதும் மற்றொரு ராகத்தின் சஞ்சாரம் இருக்கக் கூடாது என்பது அறிஞர்களின் முடிவு. திரு. எம். சுப்பிரமணிய முதலியார் பாடிக் காட்டியபோது சிறிது நீலாம்பரியின் சாயல் படர்கிறது என்று சுட்டிக் காட்டினர்.

**திரு. ப. சுந்தரேசன்:**—நட்டபாடை என்பது நாட்டையன்று என்று தெளிவான ஆதாரம் காட்ட நான் தயார் என்றார்.

இவ்வளவில் முதல்நாள் நிகழ்ச்சி முடிவடைந்தது.

# இரண்டாம்நாள் நிகழ்ச்சி

(25-12-49 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் 1 மணி வரை.)

தருமபுரம் திரு. டி. வேலாயுத ஓதுவார், கடவுள் வாழ்த்துப் பாடினார்.

நட்டபாடை யென்பது நாட்டையா?, நாட்டைக்குறிஞ்சியா? என்ற விவாதம் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றது.

திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார், "உண்ணாமுலை உமையாளொடும்" என்ற தேவாரத்தை நாட்டைக் குறிஞ்சியிற் பாடிக் காட்டினார்.

திரு. டி. வேலாயுத ஓதுவார், "அங்கமும் வேதமும்", "தேமாங்கனி" ஆகிய தேவாரப் பாடல்களை நாட்டையில் பாடிக் காட்டினார்.

திரு. கே. இலக்குமண ஐயர், "உண்ணாமுலை உமையாளொடும்" என்ற பாடலை நாட்டையில் பாடினார்.

இந் நிலையில் திரு. எம். எம். தண்டபாணி தேசிகர், இவ்வாறு ஒவ்வொரு பண் பற்றியும் கால வரையறை யில்லாமல் ஆராய்ந்து கொண்டே போனால் நம் வேலை எளிதில் முடிவடையாது. நாம் இன்னும் பல பண்களைப் பற்றி ஆராயவேண்டியிருப்பதால் நட்டபாடை பற்றி மேலும் விவாதத்தை வளர்க்காமல் ஒவ்வொரு பிரதிநிதியின் கருத்து என்ன என்பதை 'வோட்' எடுத்துப் பார்த்து விட்டால் நாம் ஒரு முடிவுக்கு வரலாம் என்று குறிப்பிட்டார்.

மேலும், "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்று ஒரு சூத்திரம் உண்டு. ரயில், விமான வசதிகள், ரேடியோ இசை இவையெல்லாம் புதியன புகுதலாகக் கொள்ளலாம். ஆனால் பழையன எல்லாவற்றையும் கழித்துவிட முடியாது. நாவினால் சுவைப்பதும், மூக்கினால் முகப்பதும், கண்களால் பார்ப்பதும் பழைய கால முறை என்று நாம் அவற்றை விட்டுவிட முடியுமா? அதுபோல இப்போது நம் முன் நிற்கும் கேள்வி நட்டபாடை என்று குறிப்பிடப்பட்டுள்ள பழைய பண், புதுமையாக நாட்டில் வழங்கும் நாட்டையோடு ஒத்திருக்கிறதா? அல்லது நாட்டைக் குறிஞ்சியோடு ஒத்திருக்கிறதா? என்பதுதான். பழைய பண்ணின் திறத்திற்கு இழுக்கில்லாமல் நல்ல முடிவுக்கு நாம் வரவேண்டும். இந்தப் பண் பற்றிப் பிரதிநிதிகள் தத்தம் கருத்தைத் தெரிவித்துவிட வேண்டும்; என்றும் திரு. தேசிகர் கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள் கே. இலக்குமண ஐயர், ஆ. அ. வரகுண பாண்டியன், டி. ஆர். வேணுகோபால் நாயுடு, டி. வேலாயுத ஓதுவார் ஆகிய நால்வரும் நட்டபாடை யென்பது, நாட்டையே என்ற தம் முடிவை அறிவித்தனர்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:—நட்டபாடை என்பதைப் பலர் வழக்கமாக நாட்டையில்தான் பாடி வருகிறார்கள். ஆனால் அது நாட்டைக் குறிஞ்சிதான் என்பதற்கு நால்வர் பாடல்களிலிருந்தே அகச்சான்றுகள் காட்ட முடியும்.

"செவ்வழிநற் பண்பாடும்"

"கொல்லியாம் பண்ணுகந்தார்"

"புறவிசை"

"பஞ்சமம் பாடி" முதலிய தேவாரப் பாடல்களிலிருந்தே இப் பண்ணின் முறையை அறிந்து கொள்ளலாம்.

காந்தார இசை நூல், பிங்கல நிகண்டு, சிந்தாமணி இவற்றை யெல்லாம் ஆராய்ச்சி செய்தால் சட்டபூர்வமான முறை நமக்குத் தெரியவரும். இவற்றினால் நட்டபாடை நாட்டைக் குறிஞ்சியே என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டும் என்று கூறினார்.

**திரு. டி. சுப்பையா தேசிகர்:**—"தோடுடைய செவியன்" என்ற பாடலைச் சம்பந்தப் பெருமான் இசைத்த சந்தர்ப்பத்தைக் கொண்டு பார்த்தால் அப் பாடலை, நாட்டையில் பாடுவதுதான் பொருத்தம் என்று தெரியுமென்று சொன்னார்.

**திரு வாளர்கள் அண்ணாமலைநகர் எம். சுப்பிரமணிய முதலியார், சி. அப்பா சாமி ஓதுவார், வி. சுப்பையா ஓதுவார்** ஆகியோர், நட்டபாடை நாட்டையே என்று கூறினர்.

**திரு. ப. சுந்தரேசன் :**—பரிபாடல் காலத்திலேயே விளங்கிய பண் நட்டபாடை; அதன் தன்மையை நாம் நுணுக்கமாக ஆராய வேண்டும்.

காலை நேரம்; யார் உனக்குப் பால் தந்தது? என்று கேட்டுத் தந்தை கோபிக்கிறார்; அடிக்கிறார். மூன்று வயதுக் குழந்தை சம்பந்தர், அந்நிலையில் அழுகை ததும்ப, "தோடுடைய செவியன்" என்று பாடுகிறார்; இந்த நிகழ்ச்சியின் குறிப்பை நினைப்பூட்டிக் கொண்டால் பண், நாட்டைக்குறிஞ்சிதான் என்ற முடிவு காண முடியும். நாட்டையிற் பாடினால் 'சுட—லைப்பொடி' என்றெல்லாம் பாடலைச் சிதைக்கவேண்டி நேரிடும். அது கூடாது. மேலும் இது 7 சுரங்களில் ஒன்று குறைந்து 6 சுரமாக விளங்கும் 'பண்ணியற்றிறம்' என்பதை மறந்துவிடக் கூடாது என்று சொன்னார்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி :**—'பண்ணியற்றிறம்' என்பதற்கு ஆதாரம் உண்டா? என்று கேட்டார்.

**திரு. ப. சுந்தரேசன் :**—ஆதாரம் உண்டு. சம்பந்தர், "புண்ணியர் பூதியர்" எனவரும் நட்டபாடைப் பண்ணமையும் பாடலில் 'பண்ணியல் பாடலறாத' என்று குறிப்பிடுகிறார். 'பண்ணியல்' 6 சுரமுடைய பண் என்பது நமக்குத் தெரியும். 'நைவளம்' என்பது நட்டபாடை. அது பழமைக்கும் பழமையான பண். நட்டபாடையில் 22 பதிகங்கள் உள்ளன. 8 கட்டளைகள் உண்டு. இவற்றை யெல்லாம் ஆராய்ந்து நோக்கும் போது நட்டபாடை என்பது நாட்டைக் குறிஞ்சியே என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும். என்னுடைய கொள்கையும் அதுவே என்றார்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி :**—பிரதிநிதிகள் எல்லோருடைய கருத்தையும் தெரிந்து கொண்டோம். பெரும்பான்மையோர் நட்டபாடை நாட்டையே என்ற முடிவுக்கு வந்துள்ளனர். சிலர் நாட்டைச்குறிஞ்சி என்கின்றனர். இன்ன ராகத்தில்தான் பாட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவரவர் விருப்பம்போல் பாடலாம். பாடும்முறை இன்னது என்பதை அறிந்து கொள்ளவே இக் கூட்டம் கூடியிருக்கிறோம். நட்டபாடைப் பண்ணை நாட்டையிலும் பாடலாம். நாட்டைக் குறிஞ்சியிலும் பாடலாம் என்பதுதான் முடிவு.

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் :**—பெரும்பான்மையோர் நாட்டை என்ற முடிவுக்கு வந்தமையால் அப்படித்தான் பாட வேண்டும் என்று யாரையும் கட்டாயப்படுத்தப் போவதில்லை. பெரும்பான்மையோர் கருத்து நாட்டை; சிலரது கருத்து நாட்டைக் குறிஞ்சி. என்று மட்டும் பதிவு செய்து கொள்வோம்.

## கொல்லி

அடுத்தபடியாக, கொல்லி, கொல்லிக் கௌவாணம் என்ற பண்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார், "கூற்றாயினவாறு" எனக் கொல்லிப் பண்ணில் வரும் பாடலை நவரோசு ராகத்தில் பாடினார். நவரோசாக எண்ணித்தான் பலரும் பாடி வருவதாகவும் குறிப்பிட்டார். "கொல்லியாம் பண்ணமைத்து" என்ற சம்பந்தர் தேவாரத்தை இதற்கு அகச்சான்றாகக் கொள்ளலாமென்றும் அவர் கூறினார்.

திரு. ப. சுந்தரேசன் :—கொல்லி, நவரோசுதான். ஆனால் பதநி-சநிப என்ற சங்கராபரண இறக்கம் வராமல் ரிஷப காந்தாரங்களின் அசைவு இல்லாமல் பாடினால்தான் நவரோசாகும் என்றார்.

பிரதிநிதிகள் அனைவரும் கொல்லிப் பண் தற்கால ராகமான நவரோசுக்கு ஒத்திருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டனர்.

கொல்லிப் பண்ணுக்கு உரிய ராகம், நவரோசு என்று முடிவு செய்யப் பட்டது.

## கொல்லிக் கௌவாணம்

பின்பு, தருமபுரம் திரு. டி. வேலாயுத ஓதுவார், "தில்லைவாழ் அந்தணர்" என்னும் பாடலை இசைத்துக் காட்டி, அதற்கேற்ற ராகம் நவரோசு என்று குறிப்பிட்டார்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி :—கொல்லிக்கௌவாணம், வேறு புராதன ராகம் எதிலாகிலும் பாடப் படுவது உண்டா என்பது தெரிய வேண்டுமென்றார்.

அண்ணாமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார் :—கொல்லிக் கௌவாணம் என்ற பண்ணைத் தோடியில் பாடுவது வழக்கம் என்றார்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார் :—கொல்லிக் கௌவாணம் புராதன ராகமாகிய தோடியிலேதான் பாடப் பெற வேண்டும். திருநெல்வேலிக் கோயிலிலே பரம்பரையாகத் தோடியிலேயே பாடி வருகின்றனர் என்றார்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி :—தோடியில் பாடிக் காட்டுங்கள் என்றார்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார், "முதுவாயோரி" என்ற பாடலைத் தோடியில் இசைத்துக் காட்டினார்.

சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை :—கொல்லிக் கௌவாணம் இரவுப் பண்ணாகச் சொல்லப் படுவதால் அதற்கேற்பவே ராகத்தைத் தீர்மானிக்க வேண்டுமென்றார்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி :—மற்றைய இடங்களில் இப் பதிகத்தை என்ன ராகத்தில் பாடி வருகின்றனர்? என்று கேட்டார்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார் :—ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக விருப்பம்போ லெல்லாம் பாடி வரலாம். அதுவா ஆதாரம்? பரம்பரையாக நாட்டில் வழக்கத்திலிருக்கும் முறையென்ன? என்றுதானே பார்க்க வேண்டும் என்றார்.

திரு. ப. சுந்தரேசன் :—குறிஞ்சி யாழ்த்திறன் 8. நட்டபாடையிலிருந்து கௌவாணம் ஒரு திறன். படுமலையில் அகநிலையாகக்

கௌவாணம் இருப்பதால் கொல்லிக் கௌவாணம் கௌவாண மாகத்தான் இருக்க வேண்டும். இம் முறையில் ஆராய்ந்தால் கொல்லிக் கௌவாணம் நட பைரவியே என்ற முடிவு நன்கு புல னாகும். அல்லது சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் குறிப் பிட்டபடி இராப்பண்ணாக இருந்தாற் குற்றமில்லை யென்று கருதி னால் தோடி என்றும் கொள்ளலாம்.

**கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி** :—நடபைரவியில் பாடிக் காட்டினால் நல்லது என்றார்.

திரு. ப. சுந்தரேசன், கொல்லிக் கௌவாணத்துக்கு உரிய "நிறை வெண் திங்கள்" என்னும் பாடலை நடபைரவியில் இசைத்தார்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி** :—கொல்லிக் கௌவாணம் பற்றிச் சிலர் நவரோசு என்றும், சிலர் தோடி யென்றும், ஒருவர் நடபைரவி என்றும் குறிப்பிட்டார்கள். இது பற்றி வேறு ஏதாவது கருத்து உண்டா? என்று கேட்டார்.

**திரு. கே. இலக்குமண ஐயர்** :—கொல்லியும், கொல்லிக் கௌவா ணமும் ஒன்று என்பதுதான் என் முடிவு என்றார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்** :—இதற்கு ஆதாரம் என்ன? என்று கேட்டார்.

**திரு. கே. இலக்குமண ஐயர்** :—இது உமாபதி சிவாச்சாரியாரின் கொள்கைப்படி ஆராய்ந்து கண்ட முடிவு என்றார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்** :—உமாபதி சிவாச்சாரியார் சித்தாந்த சாத்திரத்தில்தான் வல்லவர்; இசை நுணுக்கத்திற் கெல்லாம் அவரை ஆதாரமாகக் கொள்வது சரியன்று என்றார்.

**அண்ணாமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார்** :—கொல்லியும், கொல்லிக் கௌவாணமும் ஒன்றே என்றால் பண்களின் எண் ணிக்கை 23-ஆகக் குறைந்து விடுமே என்றார்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி** :—இது பற்றிய விவாதத்தை நாளைக்கு ஒத்தி வைப்பது நல்லதென்று நினைக்கிறேன். ஒவ்வொருவரும் தம் கருத்தை நன்றாக ஆராய்ந்து தக்க ஆதாரங்களோடு நாளைக் கூட் டத்தில் அறிவிக்குமாறு வேண்டுகிறேன் என்றார்.

**டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார்** :—இது ஆராய்ச்சிக் கூட்டம்; ஆதலினாலே ஒன்றும் அவசரப்படவேண்டியதில்லை. நன்றாக அலசிப் பார்த்துத்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஒரு மாதமானாலும் சரி. இல்லை அடுத்த ஆண்டிற்கே ஒத்திவைக்க நேரிட்டாலும் சரி. அதனாற் குற்றமில்லை. நம் முடிவு திட்ட வட்டமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு ராகத்தின் தன்மையை யும் செவ்வனே ஆராயவேண்டும். பைரவியை ஆனந்தமாகப் பாடுவது ஆனந்த பைரவியா என்றுகூட என்னைப் போன்றவர்கள் எண்ணக்கூடும். எனவே கொல்லி, கொல்லிக் கௌவாணம் இவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளை நன்றாக ஆராய்ந்த பின்னரே முடிவு காணவேண்டும் என்றார்.

**சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை** :—கொல்லிக் கௌவாணம் பற்றி இப்பொழுதே முடிவு செய்துவிடலாம் என்பது என் கருத்து. அது தோடியா, நடபைரவியா என்பதைத் தீர்மானித்துவிட்டு அடுத்த பண்ணிற்குச் செல்லுதல் பொருந்தும் என்றார்.

**திரு. ம. ப. பெரியசாமித்தூரன்** :—கொல்லி ஒரு யாழ்த்திறன்; கௌ வாணம் மற்றொரு யாழ்த்திறன். இரண்டும் வேறு வேறு பண்கள்.

இரண்டு பண்களின் பெயர்களை ஒன்றாக இணைத்துச் சில பண்களுக்குப் பெயர் சூட்டப்பெற்றுள்ளதை நாம் காண்கிறோம். உதாரணமாக நட்டபாடை என்பதில் நட்டம், பாடை என்ற இரு பண்களின் பெயர்கள் இணைந்திருக்கின்றன. எனவே பெயரமைப்பை மட்டுமே கொண்டு இரண்டும் ஒன்றே என்று முடிவு செய்துவிட முடியாது. இரண்டும் வெவ்வேறு பண்களா? அப்படியானால் இரண்டிற்கும் உரிய தனித்தனி ராகத்தின் பெயர் என்ன? என்பதை நன்றாக ஆராய்ந்துதான் முடிவு காணவேண்டும் என்றார்.

**திரு பி. ஸாம்பமூர்த்தி** :—கொல்லி, கொல்லிக் கௌவாணம் பற்றிய விவாதத்தை ஒத்திவைத்துவிட்டு அடுத்த பண்ணிற்குச் செல்வோமென்றார்.

## இந்தளம்

அடுத்து இந்தளம் என்ற பண் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

**திரு எம். எம். தண்டபாணி தேசிகர்**, "பித்தாபிறை சூடி" என்ற பாடலை நாதநாமக்கிரியாவில் இசைத்துக் காட்டினார்.

**திரு பி. ஸாம்பமூர்த்தி** :—சஞ்சாரம், தாரஷட்ஜம் வரைக்கும் போய்விட்டபடியால், மாயாமாளவகௌளமெனக் கொள்ள வேண்டியிருக்கும் என்றார்.

**திரு ப. சுந்தரேசன்** :—இந்தளம், மாயாமாளவகௌளம் போல்தான் தோன்றுகிறது. ஆனால் அதிக சுரத்தோடு அமைவதால் இந்தோளமாக இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. பெரும்பாணாற்றுப்படை ஆதாரப்படி 'மோகனம்' என்பது 'இராமக்கிருதி', இந்தளம் என்பது இந்தோளம் என்ற முடிவு பொருத்தமாகத் தோன்றுகிறது. "பித்தாபிறை சூடி" என்ற பாடலைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய சந்தர்ப்பத்தைக் கொண்டு பார்த்தாலும் இந்தோளமாகக் கொள்வதன் ஏற்றம் நன்கு புலனாகும் என்றார்.

**திரு கோ. சாரங்கபாணி செட்டியார்** :—இந்தத் தேவாரம் அன்று முதல் இன்று வரை நாதநாமக்கிரியையாகத்தான் பாடப்பட்டு வருகிறது. இந்தளத்தை இந்தோளமாகக் கொண்டால் சீகாமரப்பண்ணை நாதநாமக்கிரியையாகக் கொள்ள வேண்டும் என்றார்.

**சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை**, "பித்தாபிறை சூடி" என்ற அப் பாடலைப் பாடிக் காட்டினார்.

**திரு. ப. சுந்தரேசன்** :—இந்தளம் இந்தோளந்தான் என்பதை நான் எவ்வளவு ஆதாரம் வேண்டுமானாலும் காட்டி விளக்க முடியும். "பித்தாபிறை சூடி" என்ற பாடலின் சீரமைப்பும், இசை நுணுக்கமும் சேரப் பாடுவதுதான் முறை. "பித்தாபிறை சூடி பெரு மானே அரு ளாளா" என்றெல்லாம் சிதைத்துப் பாடுவது கூடாது என்றார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்**:—எப்படியேனும் இந்தளத்திற்கும், சீகாமரத்திற்கும் தனித்தனியே ராகத்தைத் திட்டம் பண்ணிவிடுங்கள். ஆனால் இரண்டும் ஒன்றே என்றுமட்டும் சொல்லி விடாதீர்கள் என்றார்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி** :—இந்தளம் சுத்தமான நாதநாமக்கிரியை தானே? என்று கேட்டார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார் :**—தேவார இசை நுணுக்கம் நன்குணர்ந்த தலைவர் தேசிகர் அவர்களே இந்தளம் பற்றி ஒரு முடிவு சொல்லிவிடலாம் என்றார்.

ஓதுவார்களின் கருத்தைத் தொகுத்துப் பார்த்ததில் பெரும் பான்மையோர் இந்தளம் நாதநாமக்கிரியை என்றும், சிலர் மாயா மாளவகௌளம் என்றும், ஒருவர் இந்தோளம் என்றும் கருது வது தெளிவாயிற்று.

சீகாமரத்தையும், இந்தளத்தையும் சேர்த்து ஆராய்தல் நல மென்று தோன்றினமையால் இந்நிலையில் சீகாமரம் பற்றிய ஆராய்ச்சி தொடங்கிற்று.

## சீகாமரம்

"எம்பிரான் எனக்கமுதம்" என்ற பாடலைத் திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார் பாடிக்காட்டி, ராகம் நாத நாமக்கிரியை என்று தெரிவித்தார்.

**திரு ப. சுந்தரேசன் :**—சீகாமரப் பண்ணை மாயாமாளவகௌள மாகக் கொள்ளுதல் பொருந்தும் என்று சொல்லி, " கண்காட்டு நுதலானும்" என்ற பாடலை மாயாமாளவகௌளத்திற் பாடிக் காட்டினர்.

அண்ணாமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார், அப் பாடலை நாதநாமக்கிரியையில் பாடிக் காட்டினர்.

**திரு. கே. இலக்குமண ஐயர் :**—சீகாமரம், புன்னாகவராளி ராகந் தான் என்றார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார் :**—எந்த ராகத்திலும் பாடலாம். "மட்டிட்ட புன்னை" என்ற பாடலை நாங்கள் சகானாவில்கூடப் பாடியிருக்கிறோம். அதுவா கேள்வி? பரம்பரையாக நாட்டில் பாடப்பட்டு வரும் ஏற்ற ராகம் எது என்றுதானே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

இவ்வளவில் இரண்டாம்நாள் நிகழ்ச்சி முடிவடைந்தது.

# மூன்றாம்நாள் நிகழ்ச்சி

(26-12-49 திங்கட்கிழமை காலை 10 மணி முதல் 1 மணி வரை,)

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார் கடவுள் வாழ்த்துப் பாடினர்.

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் :**—இந்தளத்திற்கும் சீகா மரத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து, ஏற்ற ராகத்தை இன்று முடிவு செய்வோம் என்று சொல்லி ஆராய்ச்சியைத் தொடங்கினர்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி:**—இன்றும் நாளையும் நம்மால் முடிந்த மட் டும் பண்களை ஆராய்வோம். விட்டுப்போன பண்களையும், ஐயத் திற்கிடமான பண்களையும் பின்னர் எடுத்துக் கொள்வோம்.

சீகாமரத்தை நாதநாமக்கிரியை என்று சொல்லலாம். ஆனல் இந்தப் பண்ணிற்குத் தாரஷட்ஜம் உண்டு என்று தீர்மானித்தால் இதை மாயாமாளவகௌளம் என்றுதான் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:—சீகாமரத்தை நாதநாமக் கிரியையாகத் தீர்மானித்தால் இந்தளத்தை மாயா மாளவ கௌளம் என்று முடிவு செய்ய வேண்டும். எதற்கும் சீகாமரம் நாதநாமக் கிரியை என்று முடிவு செய்துவிட்டு இந்தளம் பற்றிய ஆராய்ச்சியைப் பின்பு வைத்துக் கொள்ளலா மென்றார்.

திரு. ப. சுந்தரேசன்:—இந்தளம், சீகாமரம் இரண்டையும் பின்பு முடிவு செய்வதே நல்லது. ஒரு சேர நோக்கி நல்ல முடிவு காண உதவியா யிருக்கும் என்றார்.

திரு. ம. ப. பெரியசாமித் தூரன்:—சீகாமரத்தை முடிவு செய்து விட்டு இந்தளம் பற்றிய ஆராய்ச்சியைப் பின்பு செய்யலாம் என்றார்.

திரு. ஆ. அ. வரகுண பாண்டியன்:—பின்பு முடிவு செய்வதென்றால் எல்லாவற்றையுமே பின்பு விட்டுவிடலாமே? நாம் ஏன் விவாதிக்க வேண்டும்? என்றார்.

திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்:—அப்படிச் சொல்வது பொருந்தாது. நம்மால் இயன்ற அளவு ஒரு முடிவு கண்டு எஞ்சியவற்றை ஒத்தி வைப்பதே நல்லது. எல்லாவற்றையும் பின்பு முடிவு செய்வதென்றால் இந்த ஆராய்ச்சி மாநாடே தேவையில்லையே. நாம் எல்லோரும் இப்படி ஒன்றுகூடி ஆராய ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இதை நழுவவிடக் கூடாது. இந்தளம் பற்றிய ஆராய்ச்சியைப் பின்பு செய்யலாம் என்ற முடிவுக்கு வருவோம் என்றார்.

**சீகாமரப் பண்ணுக்கு உரிய ராகம், நாத நாமக்கிரியை என்று முடிவு செய்யப்பட்டது.**

## செவ்வழி

திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் :—கொல்லிக் கௌவாணம் பற்றிய ஆராய்ச்சியை இன்று தொடர்ந்து செய்வதாக நேற்றுக் குறிப்பிட்டோம். இப்போது செவ்வழி போன்ற சில பண்களை ஆராய்வோம். நாளை நேரம் இருந்தால் கொல்லிக் கௌவாணம் பற்றி முடிவு செய்வோம் என்றார்.

திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார், ''தொண்டரஞ்சும்'' என்ற பாடலைப் பாடிக்காட்டி, ராகம் யதுகுல காம்போதி என்றார்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:—அப்பர் குறுந்தொகையில் ''பாலை யாழொடு செவ்வழி'' என வருவதைக் குறிப்பிட்டுப், பாலை யாழ்த்திறனோடு அமைவது செவ்வழி என்பதை உணர்ந்து முடிவு காண வேண்டும் என்று கூறினார்.

திரு. ப. சுந்தரேசன்:—பழந் தமிழிசை, கற்றவர்க்கு மிகவும் எளிமையானது. கல்லாதவர்க்கு மிகவும் கடுமையானது. க்ஷேத்திரக்ஞர் பதங்களிலும் முத்துச்சாமி தீட்சிதர் கீர்த்தனங்களிலும் தான் பழந் தமிழிசையின் பண்பு விளங்குகின்றது. ''தொண்டரஞ்சும்'' என்பதற்கு மட்டும் யதுகுல காம்போதியில் யாரோ அழகாக ராகம் அமைத்து விட்டார்கள் என்பதற்காகமட்டும் அந்த ராகத்தை நாம் தீர்மானிப்பதாக இருக்கக்கூடாது. செவ்வழிக்கேற்ற ராகம் யதுகுல காம்போதிதான். என்றார்.

**திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி:**—செவ்வழிப் பண்ணில் வரும் எல்லாத் தேவாரங்களையும் யதுகுல காம்போதியில் பாட முடியுமா? என்று கேட்டார்.

**ஓதுவார்கள்:**—முடியும் என்றார்கள்.

**செவ்வழிப் பண்ணுக்கு உரிய ராகம், யதுகுல காம்போதி என்று முடிவு செய்யப்பட்டது.**

## கௌசிகம்

பின் கௌசிகம் என்ற பண் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

''காதலாகிக் கசிந்து'' என்னும் தேவாரத்தைத் திருவாளர்கள் கோ. சாரங்கபாணி செட்டியார், டி. சுப்பையா தேசிகர் ஆகிய இருவரும் பாடினர்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி:**—இருவரும் பாடியதிலிருந்து பைரவி ராகம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது என்றார்.

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்:**—எந்தப் பாடலும் பாடுபவரின் திறமையைப் பொறுத்துத்தான் அழகு பெறுகின்றது. பல்லாண்டுகளாக நம்மிற் பலர் சங்கீதப் பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்தாததால் பாடும் முறையில் சில குறைபாடுகள் இருக்கலாம். அவற்றையெல்லாம் நீக்கிப் பண்களின் பண்பு குறையாமற் பாடும் முறையை வலியுறுத்தவே இந்தக் கூட்டம் கூடியிருக்கிறது. எனவே பைரவியில் உசேனியின் வாடை யடிக்கிறதே என்றெல்லாம் தயங்க வேண்டியதில்லை. லய சுத்தமாகப் பாடும் பண்பை வளர்க்க வேண்டும்.

''காதலாகிக் கசிந்து'' என்னும் பாடலுக்குப் பைரவிதான் ஏற்ற ராகம். ஆனால் கரஹரப் பிரியாவில் அதனைப் பாடும்படி கல்கி போன்ற அன்பர்கள் காதலாகிக் கசிந்து கேட்பதுண்டு; என்று சொல்லி, அப்பாடலைப் பைரவியில் இசைத்துக் காட்டினார்.

சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை சொன்னபடி திரு. கே. பி. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளையும் இப் பாடலைப் பாடிக் காட்டினார்.

**திரு. ப. சுந்தரேசன் :**—கௌசிகம் என்பதுதான் பிற்காலத்தில் கைசிகம் என்று வழங்கப்பட்டது. கைசிகப்பண் சுத்த சாவேரி ராகம் என்பதை விபுலாநந்த அடிகளார் மிகத் தெளிவாக முடிவு செய்துள்ளார்கள்.

''அழல்நீ ரொழுகி யனைய சடையும்'' என்னும் சுந்தரமூர்த்தி பாடல் கைசிகப் பண்ணில் உள்ளது; அது சுத்த சாவேரி ராகமே.

காந்தாரம், செந்திறம், இந்தளம், சாதாளி, தனுசி ஆகிய ஐந்தும் மிகப் பழைய பண்கள். இவற்றில் சாதாளிக்குத் தொடர்பாக உள்ளது கௌசிகம். ஆகவே சுத்த சாவேரி என்று சொல்வது மிகப் பொருத்தம். சுத்த சாவேரியிற் பாடினால் தைவதம் பூரணமாக அமையக் காணலாம் என்று சொல்லி, ''அழல்நீர் ஒழுகி யனைய சடையும்'' என்ற பாடலைச் சுத்த சாவேரியிற் பாடிக் காட்டினார்.

**அண்ணாமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார் :**—''அழல்நீர்'' என்னும் பாடலை விபுலாநந்த அடிகள் குறிஞ்சிப் பண்ணிலே சேர்த்திருக்கிறார்கள். அதிற் குறிப்பிட்டுள்ள கைசிகம் என்ற பண் தவறு என்பதுதான் அடிகளார் கருத்து என்றார்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி:—கௌசிகம் என்பதைப் பைரவி என்றே முடிவு செய்யலாம் என்றார்.

கௌசிகப் பண்ணுக்கு உரிய ராகம், பைரவி என்று முடிவு செய்யப்பட்டது.

டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார் :—இதற்கு மாறுபட்டோர் கருத்துக்களையும் விரிவாகக் குறித்துக் கொள்ளும்படி சொன்னார். (அவை மேலே குறிக்கப் பெற்றுள்ளன.)

## குறிஞ்சி

அடுத்துக் குறிஞ்சிப்பண், ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அண்ணாமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார் "பாட்டும்பாடி" என்ற பாடலை ஹரிகாம்போதியில் பாடினார்.

பின்னர்த் திருவாளர்கள் தி. சாமிஐயா தேசிகர், திருவாரூர் எம். சுப்பிரமணிய முதலியார், டி. வேலாயுத ஓதுவார் ஆகியோர் முறையே "வம்பார் குன்றம்" "நன்றுடையானை" "மடித்தாடும்" என்னும் பாடல்களை ஹரிகாம்போதியில் பாடினார்கள்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி:—இவர்கள் அனைவரும் பாடியதில் ஒருவர் சுத்தமாக ஹரிகாம்போதியில் பாடினார்; மற்றவர்கள் பாடும் போது 'சரிம—பதச'வும் ஒரே இடத்தில்தான் வந்தது. எனவே ஹரிகாம்போதி யென்று தீர்மானிக்கலாம். வேறு ஏதாவது கருத்துண்டா? என்று கேட்டார்.

திரு. தி. சாமிஐயா தேசிகர்:—குறிஞ்சியை ஹரிகாம்போதி யென்று சொல்லுகிறார்கள். ஆனால் என்னுடைய ஆசிரியர் குறிஞ்சிராகம் என்று சொல்லியிருக்கிறார் என்றார்.

திரு. ப. சுந்தரேசன்:—குறிஞ்சி என்பது தீட்சிதர் காலம் வரையிலும் பெயர் மாறாமலே இருக்கிறது. குறிஞ்சிராகத்திலேயே குறிஞ்சிப்பண் இருந்தால் நல்லது. சம்பந்தர், அடியவர் குழாத்தோடு ஊர்ப்பக்கம் வரும்போது ஊரைப்பற்றியும், அதன் வளத்தைப் பற்றியும், அடியார்கள் எல்லோரும் பாடவேண்டும் என்ற கருத்தோடுதான் குறிஞ்சிப்பண் இசைத்துள்ளார் என்ற சந்தர்ப்பத்தை நாம் மறக்கக் கூடாது. "சித்தந் தெளிவீர்காள்" "தேனினும் இனியர்" இவை போன்ற குறிஞ்சிப்பண்ணில் அமைந்த பாடல்களை யெல்லாம் குறிஞ்சிராகத்தில் பாடினால்தான் சீர் சிதையாமல், உள்ள நெகிழ்ச்சியின் உயர்வு காட்டி நிற்கும். இயலும் இசையும், உயிரும் உடலும் போன்றவை; இரண்டின் பண்பும் கெடாமல் பாதுகாக்க வேண்டும். எனவே நம் முடிவுகள் எல்லாம் தக்க ஆதாரங்களைக் கொண்டனவாக இருக்க வேண்டும். குறிஞ்சிப் பண்ணிற்குக் குறிஞ்சிராகமே பொருத்தமானது என்று சொல்வதில் எவ்வளவோ சிறப்புக்கள் உண்டு என்றார்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி:—குறிஞ்சிப்பண்ணைத் தேவாரப் பாடகர் எல்லோரும் பரம்பரையாக எந்த ராகத்தில்தான் பாடுகிறார்கள் என்பது தெரியவேண்டும் என்றார்.

டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார்:—குறிஞ்சிப்பண் தற்போது வழங்கும் குறிஞ்சிராகமாகத்தான் இருக்கவேண்டுமென்று சொல்வதிலே நியாயம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. குறிஞ்சி என்ற அழகான பெயரிலே ஒரு பண் அமைந்து, அதே பெயரில் ஒரு ராகமும் அமைந்துள்ளபோது

குறிஞ்சிப்பண்ணை குறிஞ்சிராகம் என்று கூறுவது மிகமிகப் பொருத்தமே. இதனை மறுப்பவர்கள் இன்னும் பலமான ஆதாரம் காட்டவேண்டும் என்றார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:**—குறிஞ்சியைச் சுருட்டி ராகத்தில் பாடுவதும் சென்னைப் பக்கத்தில் வழக்கமாகவுள்ளது என்றார்.

**டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார்:**—குறிஞ்சிராகமாக இருக்கலாம் என்ற வாதமும் பழமையானது தானே? என்று கேட்டார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:**—ஆம்; பழமையான கொள்கைதான்; புதிதாகக் கூறுவதன்று என்றார். பின்பு, "பொன்திரண்டன்ன" "நன்றுடையானை" ஆகிய பாடல்களைச் சுருட்டியில் பாடிக் காட்டினார்.

**டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார்:**—இங்கு வந்துள்ள பிரதிநிதிகள் எல்லோரும் ஓர் உண்மையை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த ஆராய்ச்சியின் நோக்கமே, கூடுமான வரையில் நடைமுறை வழக்கத்தை ஆராய்ந்து, அதில் மாற்றம் தேவைப்படுமானால் மாற்றி, உண்மை என்னவாக இருக்கலாம் என்று கண்டு பிடிப்பதுதான். இதில் நாம் செய்யும் முடிவுகளை அச்சிட்டு, இன்னும் ஏனைய இசைவாணர்களுக்கும் அனுப்பிக், கருத்துக்களை வரவழைத்து, நன்றாக ஆராய்ந்த பின்னரே திட்டமான முடிவு செய்யப்படுமென்றார்.

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்** "நன்றுடையானை" என்ற பாடலைக் குறிஞ்சிராகத்தில் பாடிக் காட்டினார்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி:**—குறிஞ்சிப்பண்ணைக் குறிஞ்சிராகமாகக் கொள்வது சிறப்புத்தான் என்றார்.

**திரு. சி. அப்பாசாமி ஓதுவார்:**—குறிஞ்சிராகமே என்று நான் சென்ற நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானித்துள்ளேன் என்றார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியாரும், திரு. கே. இலக்குமண ஐயரும்** குறிஞ்சிராகமே என்றார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி:**—கால மாற்றத்தால் பெயர்கள் மாறுவது இயற்கை. ஆயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்த பண்கள் ஆகையால், அவை இக்கால ராகங்களோடு ஏறத்தாழ ஒற்றுமையாயிருந்தாலே போதும். ஒப்புக்கொண்டு விடலாம். பெயர் இத்தனை வருஷங்களாக மாறாமல் அப்படியே இருக்கிறது என்று சொன்னால்தான் ஆச்சரியமாக இருக்கும். குறிஞ்சி என்ற பண்ணின் பெயரும் ராகத்தின் பெயரும் ஒன்றாக இருப்பதாலேயே ராகத்தை முடிவு செய்வது கூடாது. பழமையான முறையில் குறிஞ்சிப் பண்ணை யார், யார் எங்கெந்த ராகங்களில் பாடுகிறார்கள் என்று நன்றாக ஆராயவேண்டும். குறிஞ்சிராகத்தில் பரம்பரையாகப் பாடிவரும் வழக்கம் எங்கேனும் இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். இங்கில்லா விட்டால் ஒரு வேளை அவ் வழக்கம் யாழ்ப்பாணத்தில் இருக்கலாம். அல்லது நம் ஸாம்பமூர்த்தியவர்கள் சொற்பொழிவில் குறிப்பிட்டபடி இந்தோநேஷியாவில் இருக்கலாம். அந்த முறைகளை யெல்லாம் எப்படியாவது ஆராய்ந்துதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஐயமிருந்தால் அடுத்த வருஷத்திற்கு ஒத்தி வைப்பது குற்றமில்லை. ஏறத்தாழ இருக்கும் ஒற்றுமைகளைத்

கொண்டு ஏதாவது ஒரு சில ராகங்களை நாம் திட்டப்படுத்தி ஞலே அது நாம் கூடிச் செய்யும் இந்த ஆராய்ச்சியினுல் உண்டா கும் நல்ல பலன் என்றே கருதவேண்டும் என்ருர்.

குறிஞ்சியைப் பற்றிப் பின்பு ஆராயலாம் என்று முடிவு செய்யப் பட்டது.

## பஞ்சமம்

அடுத்துப் பஞ்சமம் என்ற பண் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருவாளர்கள் திருவாரூர் எம். சுப்பிரமணிய முதலியார், தி. சாமிஐயா தேசிகர், சொ. சட்டநாத தேசிகர், கோ. சாரங்க பாணி செட்டியார் ஆகியோர் "தானெனை" "கண்பொலி" "அர விரி" "வரணவுர" "பைங்கோட்டு" முதலிய பாடல்களைப் பாடினர்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி:—சிலர் பாடியதில் மேலே அசாவேரி பூரணமாக இருக்கிறது; கீழே புன்னுகவராளியின் சாயை தட்டு கிறது என்ருர்.

பின்னர், அண்ணுமலைநகர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார், திரு. டி. வேலாயுத ஓதுவார் ஆகியோர் முறையே "விடையவன்", "தானெனை" ஆகிய பாடல்களைப் பாடினர்.

திரு. ப. சுந்தரேசன்:—"தானெனை" என்பதை அடாணுவில் பாடிக்காட்டி இப்படிக்கூடப் பாடலாம். இதுவா பிரச்னை? பஞ் சமம் என்பது கேதாரகௌளம் என்று விபுலாநந்த அடிகள் முடிவு கட்டியுள்ளார். இதற்கு ரத்னுகரம் போன்ற நூல்களி லிருந்து எவ்வளவோ ஆதாரம் காட்ட முடியும் என்ருர்.

திரு. டி. ஆர். வேணுகோபால் நாயுடு:—சாரங்கதேவர் சொல்லி விட்டார் என்பதற்காக எதையும் முடிவு கட்டிவிடக் கூடாது. ரத்னுகரத்தை எடுத்ததற்கெல்லாம் ஆதாரமாக இழுப்பது அவசிய மில்லை. அது எவ்வளவு தூரம் இசைக்கு ஒத்து வருகிறதென்பது எல்லோருக்கும் தெரியும் என்ருர்.

திரு. ஆர். கணேச பிள்ளை "பைங்கோட்டு" என்ற பாடலைச் சக்கரவாகத்தில் பாடினுர்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி:—சக்கரவாகம் பிற்காலத்தில் வந்துள்ள ராகம். பழமையான ராகமாகத் தீர்மானிப்பது நல்லது என்ருர்.

திரு. வி. சுப்பையா ஓதுவார், "கண்பொலி" என்ற பாடலைப் பாடினுர்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி:—ஆகிரி ராகம் 1800 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட கிரந்தங்களில் வருகிறது. நுட்பமான ராகம். "ஆகிரி பாடிய அன்று அன்னம் கிடைக்காது" என்று சொல்வதுண்டு. துக்ககரமான ராகம்; அதைப் பாடிக் கச்சேரியை நிறுத்தக் கூடாது என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. சிலர் சௌராஷ் டிரத்திலும், சிலர் புன்னுகவராளியிலும், சிலர் அசாவேரியிலும் பாடிக் காட்டினுர்கள். பஞ்சமம் என்பது ஆகிரி என்று ஒப்புக் கொள்ளலாமென்று தோன்றுகிறது என்ருர்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:—" பஞ்சமம் பாடியாடி " என்று தேவாரத்திலேயே அகச்சான்றுண்டு. ஆகிரியில் பாடு வதுதான் வழக்கம். ஆனுல் மிகச் சிலரே ஆகிரியைச் சுத்தமா கக் கையாளுகிருர்கள் என்று சொல்லித் திருவிசைப்பாவில் உள்ள "ஒளிவளர் விளக்கே" என்ற பாடலை ஆகிரியில் பாடிக் காட்டினுர்.

திரு. ப. சுந்தரேசன்:—ஆகிரி நுட்பச் சுருதியுள்ள ராகம் என்பதனால் அது தேவாரத்தில் இருக்கவேண்டு மென்பதற்கு என்ன ஆதாரம்? ஆகிரிக்கென்று தனியாக ஒரு பண்ணும் தேவாரத்தில் இல்லை என்பது என் கருத்து என்றார்.

திரு. பி. ஸாம்பமூர்த்தி:—பஞ்சமம் என்பது ஆகிரி என்று முடிவு செய்வோம். அதோடு ஆராய்ச்சியை முடிப்பது நல்லதன்று. ஆகையால் செந்துருத்தியைப் பற்றி மட்டும் தீர்மானித்து இன்று கூட்டத்தை முடிப்போம் என்றார்.

**பஞ்சமப் பண்ணுக்கு உரிய ராகம், ஆகிரி என்று முடிவு செய்யப்பட்டது.**

## செந்துருத்தி

திரு. எம். எம். தண்டபாணி தேசிகர், ''மீளா அடிமை'' என்ற பாடலைப் பாடினார். ராகம் மத்தியமாவதிதான் என்று அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

**செந்துருத்திப் பண்ணுக்கு உரிய ராகம், மத்தியமாவதி என்று முடிவு செய்யப்பட்டது.**

இவ்வளவில் மூன்றாம்நாள் நிகழ்ச்சி முடிவடைந்தது.

## நான்காம்நாள் நிகழ்ச்சி

(27–12–49 செவ்வாய்க் கிழமை காலை 10 மணி முதல் 1 மணி வரை.)

திரு. கோ. சாரங்கபாணி செட்டியாரும், திரு. வி. சுப்பையா ஓதுவாரும் சேர்ந்து கடவுள் வாழ்த்துப் பாடினார்கள்.

தொடக்கத்தில், திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் பின்வருமாறு பேசினார்:

நாம் ஒரு பெரிய அரிய விஷயத்தை இந்த நான்கு நாட்களும் ஆராய்ச்சி செய்து வருகிறோம். நம் நாட்டுச் சங்கீதமானது சுமார் 20,000 வருஷங்களாக வளர்ந்து வந்திருக்கிறது. பேராசிரியர் ஸாம்பமூர்த்தியவர்கள் சொற்பொழிவில் குறிப்பிட்டதுபோல் இமயமலை முதல் கன்னியாகுமரி வரை ஒரு பாணி, ஒரு நாகரிகம், ஒரு கலை வளர்ச்சி பரந்திருந்தது. சங்கீதக் கலை இந்தப் பிரதேசம் முழுவதும் வளர்ந்து வந்திருக்கிறது.

தமிழ் நாட்டிலேதான் உயர்ந்த லட்சியங்களுக்கு ஏற்ற உயர்ந்த உருவம் தந்துள்ளோம். நடராஜமூர்த்தியின் உருவத்திலே உலகில் யாரும் சாதிக்கமுடியாத கலையை நாம் சிருஷ்டித்திருக்கிறோம்.

தமிழிலேதான் உயர்ந்த கவியுண்டு என்பது தாகூரின் கருத்து. டாக்டர் வின்ஸ்லோ என்பவர் கிரேக்க பாஷையிலுள்ள கவியைக் காட்டிலும் மேலானது தமிழ்க்கவி என்று எழுதியிருக்கிறார். சாந்திநிகேதனத்துக்கு நாங்கள் போயிருந்தபோது தமிழ்க் கவியைப்பற்றித்தாகூரின் கருத்தை நாங்கள் அறிந்து மகிழ்ந்தோம். மற்றக் கவிகள் எவ்வளவு வளர்ந்திருக்கின்றனவோ அவைகளைக் காட்டிலும் மேலாகத் தமிழ்க்கவி வளர்ந்திருக்கிறதென்று சாந்தி நிகேதனத்தில் நான் சொன்னேன். அதை அங்குள்ளவர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

ராகங்களுக்குக் களை என்பது ஒன்று உண்டு. களை உள்ள பாடல்களை நாம் பெற்றுள்ளோம். அவற்றை நாம் பாதுகாக்க

வேண்டும். தேவாரப் பாடகர்களையெல்லாம் ஒன்ருகக் காணும் பெருமை எங்களுக்குக் கிடைத்துள்ளது. தேவாரப் பண்கள் இறைவனுடைய சுயநலம் காரணமாகவே நம் கைக்கு வந்துள் ளன என்று சொல்லவேண்டும்.

கச்சேரி பந்தாவில் சங்கீதம் மிகவும் வளர்ந்து கலையைக் கெடுத்துவிட்டது என்பது என் கருத்து. ஒரு பெண்ணுக்குக் கூந் தல் எவ்வளவு நீளமாக இருந்தால் நன்ருக இருக்குமோ அவ்வளவு தான் வேண்டுமே தவிர அளவுக்கு மீறி நான்கு பாகம் நீண்டிருந் தால் கத்தரியை உபயோகிக்க வேண்டியது அவசியமாகிவிடும்.

நான் படிக்கின்ற காலத்திலே தேவாரக் கோஷ்டியில் பாடினல் பெஞ்சுமேல் ஏறு என்று ஆசிரியர்கள் சொல்வது வழக்கம். ஆனல் அந்த வழக்கம் இப்போது எப்படி மாறிவிட்டது தெரியுமா? தேவாரம் பாடினல் டிஸ்மிஸ் என்ற நிலைமைக்கு நாம் வந்து விட்டோம்.

> " ஆடல் புரிந்தான் அரனென்றும் மூவர் தமிழ்ப்
> பாடல் உகந்தான் பரனென்றும்—கூடலில்
> நன்னரி வாசிக்கு நடைபயிற்றினன் என்றும்
> கின்னரி வாசிக்கும் கிளி."

இந்த அருமையான பாட்டிலிருந்து மதுரையெங்கும் மூவர் தமிழாகிய தேவாரம் எவ்வாறு முழங்கிற்று என்று தெரிகிற தல்லவா!

உங்கள் எல்லோரையும் கண்டு ஆராய்ச்சியிற் கலந்துகொள் ளும் பெருமை இந்த நான்கு நாட்களாக எங்களுக்குக் கிடைத் தது. மகிழ்ச்சி.

## வியாழக் குறிஞ்சி

பின்னர் வியாழக் குறிஞ்சி என்னும் பண், ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார், " அவ்வினை " என்னும் பாடலைச் சௌராஷ்டிர ராகத்தில் பாடினர்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார், " பந்தத்தால் " என்னும் பாடலைப் பாடினர்.

**வியாழக் குறிஞ்சிப் பண்ணுக்கு உரிய ராகம், சௌராஷ்டிரம் என்று முடிவு செய்யப்பட்டது.**

## தக்கேசி

திருவாளர்கள், அண்ணாமலைநகர் எம். சுப்பிரமணிய முதலி யார், டி. வேலாயுத ஓதுவார், கே. இலக்குமண ஐயர், தி. சாமி ஐயா தேசிகர், ஆர். கணேசபிள்ளை ஆகியோர் தக்கேசிப் பண் அமைந்த சில பாடல்களைப் பாடினர்.

**திரு. ப. சுந்தரேசன்** :—காம்போதியில் சசநி பதச என்னும் காகலி நிஷாதம் கூடிய ரஞ்சகப் பிரயோகம் வந்துவிடுகிறதே யென்ருல் தேவாரப் பாடகர்களுக்குச் சரியான பயிற்சி இன் மையே அதற்குக் காரணம். தக்கேசி, காம்போதி என்று முடிவு செய்யலாம். ஆனல் செவ்வையாகப் பாடவேண்டும் என்ருர்.

**திரு பி. ஸாம்பமூர்த்தி** :—காகலிநிஷாதம் கலந்தே வருவதால் பாஷாங்கமான காம்போதி என்றுதான் கொள்ள வேண்டியிருக் கும் என்ருர்.

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் :—** காம்போதியில் காகலி நிஷாதம் சேர்க்கலாமா, வேண்டாமா என்பதைப் பின்னுல் முடிவு செய்து கொள்ளலாம் என்ருர்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி :—**சநிப நன்ருக வரலாம். மகஸ என்று கீழே இருப்பதால் சநிபவில் காகலி நிஷாதம்தான் வரவேண்டும் என்ருர்.

**தக்கேசிப் பண்ணுக்கு உரிய ராகம், காம்போதி என்று முடிவு செய்யப் பட்டது.**

## காந்தார பஞ்சமம்

திருவாரூர் திரு. எம். சுப்பிரமணிய முதலியார், "ஆடினுய் நறு நெய்யொடுபால்" என்ற பாடலைக்கேதார கௌளத்தில் பாடினுர்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி :—**கேதார கௌள ராகம் பூரணமாக இருக்கிறது; ஆனுல் பதச என்பது உண்டா? என்று கேட்டார்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார் :—**அகார உகாரம் கலந்து வருவதால் கேதார கௌளமா? 'நாராயண கௌளமா?' என்ற ஐயம் ஏற்படக்கூடும் என்று சொல்லி, "இடரினும் தளரினும்" என்ற பாடலைப் பாடிக்காட்டினுர்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி ;—**நாராயண கௌளமாக இருந்தால் மகரிகரிச வரவேண்டும் என்ருர்.

**திரு. கோ. சாரங்கபாணி செட்டியார் :—**புலன்கள் ஒடுங்கி, உள்ளம் உருகிப் பாடுவது தேவாரம். அதற்கு மந்திரப் பாட்டு என்று பெயர். சங்கீதம், சபாஷ் போடுவதற்காகப் பாடப்பெறுவ துண்டு. ஆனுல், தேவாரம் அப்படியன்று. தேவாரம் பாடும்போது அதிலுள்ள சொற்களைத் தவிர வேறு சங்கரா மகாதேவா என்பது போன்ற சொற்களை இடையில் சேர்க்கவே கூடாது என்று ஒரு விதியுண்டு. சுரம்பாடுவதுகூட அவசியமில்லை என்றுதான் சொல்லவேண்டும் என்ருர்.

**திரு. ப. சுந்தரேசன் :—**தேவாரம் பழைய வயிரம். இந்த ஆராய்ச்சி, வைரத்தை நன்ருகத் துடைத்துச் சுத்தம் செய்து போட்டுக் கொள்வது போன்றது.

காந்தார பஞ்சமம் சிறந்த மேசகல்யாணி மேளத்தில் அமைந்தது. அதனை ஒருவர் பதபச ஒருவர் பநிச இன்னும் ஒருவர் மகரிகச என்றெல்லாம் பாடுவதென்ருல் எப்படி வரும்? சிறந்த மேசகல்யாணியில் மேற்செம்பாலை என்ற ராகம் அழியாமல் இருக்கும்போது நான் கேதார கௌளம் பாடுவேன்; நான் நாராயண கௌளம் பாடுவேன்; என்றெல்லாம் சொல்வது சரியாகுமா?

தேவாரம் பாடும்போது சுரம் பாடக் கூடாது என்று நண்பர் சாரங்கபாணி செட்டியார் கூறுவது சரியன்று. சுரம் பாடுவது தென்னுட்டிற்கே சிறப்பாக உள்ள இசை நுணுக்கம். "ஏழிசையாய் இசைப்பயனுய்" என்று ஏன் சொல்லியிருக்கிருர்கள்? பொருத்தமான சங்கதிகளுடன் விஸ்தாரமாகச் சுரம்பாடுவதில் குற்றமில்லை. இசையில் சுரம்பாடுவதும் ஒரு திறமை. சுரம்பாடுவது தேவாரத்திற்குப் புறம்பானதன்று.

காந்தாரபஞ்சமம் மேற்செம்பாலையாக இருப்பதால் கல்யாணி ராகமாகத்தான் கொள்ள வேண்டும்; கல்யாணி ராகத்திற்குக் கீர்த்தனம் இல்லாமல் தேடிக்கொண்டிருக்கும்போது காந்தாரபஞ்சமம் கல்யாணி என்று கொண்டால் எத்தனை அழகான பாடல்கள் நமக்குப் பாடக் கிடைக்கும்? பழமையான இசை இங்கேதான் தோன்றியது என்று பெருமை பேசிக்கொண்டே பழந்தமிழ்ப் பண்முறையைக் கவனிக்காமல் இருப்பது சரியா? என்றார்.

திரு. கோ. சாரங்கபாணி செட்டியார்:—சுரம்பாடுவதுபற்றித் திரு. ப. சுந்தரேசன் கூறுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. காந்தாரபஞ்சமம், கல்யாணியாக இருக்கலாம் என்பதில் தவறில்லை. ஆனால் வழக்கத்தில் கேதார கௌளமாகத்தான் பாடப்படுகிறது என்றார்.

காந்தார பஞ்சமப் பண்ணுக்கு உரிய ராகம், கேதாரகௌளம் என்று முடிவு செய்யப்பட்டது.

பின்னர், டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார், ஆராய்ச்சிக் கூட்டத்தைப் பற்றித் தம் கருத்துக்களை அறிவித்தார். அவர் கூறியதாவது:

இந்த நான்கு நாட்களாக நாம் ஆராய்ச்சி செய்து ஏதோ சில முடிவுகள் செய்துள்ளோம். நம் இசைவாணர்களுக்கு ஆராய்ச்சி என்பது புதிது. இப்போது ஆராய்ச்சி என்பதுகூட ஒரு புதிய கலையாகவே விளங்குகிறது. இக் கலை ஏறக்குறைய 100 ஆண்டுகளாகத்தான் மேல்நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறது. இக் கலையில் முடிவு கண்டுவிட்டோம் என்று யாரும் எக்காலத்திலும் சொல்லமுடியாது. 20 ஆண்டுகளுக்கு முன்பு செய்த முடிவு இப்போது தவறாகத் தோன்றலாம். எல்லாம் கரை கண்டுவிட்டோம் என்ற இறுமாப்புடையவர்கள் ஆராய்ச்சியிற் புகுந்துவிட்டால் தம் அறிவின் சுருக்கத்தை அறிந்து அதிசயிப்பார்கள்.

இந்த ஆராய்ச்சியில் நாம் கண்ட முடிவு நிலையானது, சரியானது என்று திட்டமாகச் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. அமைதியாக ஏதோ ஓரளவு ஆராய்ந்து தீர்மானித்தோம் என்றுதான் கூற முடியும்.

இந்த நான்கு நாட்களும் நடைபெற்ற ஆராய்ச்சியைக் கண்ட பிறகு எனக்குத் தைரியம் வந்துவிட்டது. இசை, பண் இவற்றில் நம் இசைவாணர்களுக்குத் திறமையுண்டு எனக் கண்டோம். மிகவும் மகிழ்ச்சி.

எதைப்பற்றி ஆராயலாம் என்று சுமார் 6 மாத காலமாக யோசித்துக் கடைசியில் தேவாரப் பண் ஆராய்ச்சியைத் தொடங்கலாம் என்ற வழி தோன்றிற்று; இதுகூடத் தெய்வச் செயல் என்றுதான் சொல்லவேண்டும்.

சென்ற 7 வருஷங்களாக இசையைப் பற்றிப் பலமாக விவாதம் செய்து வந்திருக்கிறோம். மனிதன் தன் உள்ளத்தின் உணர்ச்சிகளை மற்றவர்கள் உணரும்படியாக எடுத்து வழங்குவதற்கேற்ற அரிய சாதனமே இசையென்பது என் கருத்து. என் உள்ளத்து உணர்ச்சியை நீங்களும் உணரவேண்டுமானால் இசையின் மூலமாகத்தான் முடியும்.

இசைக்கு முதல் உற்பத்தி வெறும் நாதமாகத்தான் இருந்திருக்க வேண்டும். மூங்கிற் புதர் அசையும்போது அதில் ஒரு

நாதம் பிறக்கிறதென்று கண்ட மனிதன், ஒரு மூங்கிற் குழலே எடுத்து ஊதிப் பார்த்தான்; இனிய குரல் எழுவதை உணர்ந்தான்; புல்லாங்குழல் என்னும் கருவியை உண்டாக்கிவிட்டான்; இதைப் போன்றே நாகஸ்வரம், வீணை போன்ற கருவிகளையும் கண்டு பிடித்தான். கருவிகளின் இசையைக் கண்டுபிடித்து மகிழ்ந்தவன், சொல்லால் இசைத்துப் பாடும் முறையைப் பின்னரே கண்டுபிடித் திருப்பான்; அதன்படியே சாகித்தியம் ஏற்படலாயிற்று; கருவி களையும் சாகித்தியத்தையும் பொருத்திப் பண்ணிசைக்கும் பண்பு உண்டாயிற்று; கருத்தும் இசையும் சேர உள்ளத்துணர்ச்சியை எளிதாக வெளிப்படுத்துந் திறம் வளர்ந்தது. இரக்கத்தை வெளிப் படுத்தும் நிலையில் விளரிப் பண் பாடுந் திறம் பெற்றான். சாகித்தி யத்தையும், நாதத்தையும் பிரிக்கமுடியாத நிலை உயர்ந்தது. அவற்றிலிருந்து ஒன்றை யொன்று பிரித்துவிட்டால் பயனில்லை; இன்பமும் இல்லை.

தேவாரம், இசைக் கலைக்கு உயர்ந்த சாதனம் என்று கூற லாம். ஆகவேதான் முதல்தர இசைநூலாகிய தேவாரத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டோம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்பது உண்மைதான். ஆனால், எந்த விதமான பழமை என்பதை முதலில் அறிய வேண்டும். ஒரே காலத்திலேயே மக்கள் பேசும் மரபிலே ஊருக்கு ஊர் வேற்றுமை காண்கிறோமே! இசையிலும், பண்ணி லும் காலத்தின் மாற்றத்தால் வேறுபாடுகள் இருப்பது ஆச்சரிய மில்லை. மாற்றம் இல்லாமல் இருந்தால்தான் ஆச்சரியப் படவேண் டும். பாரம்பரியம் சம்பிரதாயம் என்றெல்லாம் பேசுகிறோம்; இவற்றில் அநுகூலமும் உண்டு, பிரதி கூலமும் உண்டு. 250 வருஷங்களுக்கு முன் ஒரு பெரியவர் ஒரு தவறு செய்து விட்டால் அவரைப் பரம்பரையாகப் பின்பற்றுவோரும் அந்தத் தவறை விடாமல் பற்றிக்கொண்டேதான் இருக்க நேரிடும். கொல்லி என் றொரு பண்ணை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டால் அது ஆதியில் எந்த ராகமாக இருந்திருக்க வேண்டும் என்று ஆராயவேண்டும். குறிஞ்சிப்பண்ணும், குறிஞ்சிராகமும் ஒரே பெயரில் நல்ல தமிழில் இருக்கின்றமையால் இரண்டும் ஒன்றே என்று சொல்வது பொருத்தமாகத்தான் இருக்கும். அதை மறுப்பவர்கள் தக்க ஆதாரங்கள் காட்டவேண்டும்.

இந்த வகையான ஆராய்ச்சியில் உங்களுக்கு ஊக்கம் இருந் தால், இதையே தமிழ் இசைச் சங்கத்தில் ஒரு டிபார்ட்மெண் டாக வைத்து விடலாம்.

தம் இலக்கண, இலக்கிய, இசைத் திறமையைக் காட்டுவ தற்காகத் தேவாரத்தை உபயோகிக்கக் கூடாது. சுரம் பாடுவது அவ்வளவு முக்கியமில்லை என்று சிலர் கருதுவது தவறன்று; சுரம் என்பது கணித சாஸ்திரம் போன்றது; உணர்ச்சியை வெளியிடக் கணித சாஸ்திரம் அவசியமா? நன்றாக ஆராய வேண்டும்.

நீங்கள் எல்லோரும் இந்த ஆராய்ச்சியில் உற்சாகமாகக் கலந்து கொண்டு ஒத்துழைத்தது பற்றி மிகவும் மகிழ்ச்சி யடை கின்றேன். உங்களுக்கு இந்த ஆராய்ச்சியிலிருந்து சுயமரியாதை ஏற்பட்டு விட்டது. தேவாரக் கோஷ்டி என்றாலே பரிதாப

உணர்ச்சியோடு நோக்கிய காலம் மாறிவிட்டது என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழில் இலக்கியம், இலக்கணம், இசை, மூன்றையுந் தனித்தனியே படித்தாற் பயனில்லே; மூன்றையும் சேர்த்தே பயில வேண்டும். இசைவாணர்கள் எல்லோரும் இலக்கிய இலக்கணப் பயிற்சியையும் வளர்க்க வேண்டும். நீங்கள் இன்று முதல் இன்னும் பன்மடங்கு ஊக்கத்தோடு பண் ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தமிழிசைக்குத் தொண்டு செய்வீர்கள் என நம்புகிறேன்.

**திரு. பி. ஸாம்பமூர்த்தி** :—நான்கு நாட்களாக நாம் நல்ல ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தோம். இதன் பயன் பிற்காலத்தில்தான் தெரியும். தேவாரப் பண்களைப் பற்றி ஆராய வேண்டுமென்னும் எனது நெடுநாள் ஆவல் இப்போது நிறைவேறுவது குறித்துப் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

சங்கீதம் நம் வாழ்க்கையோடு கலந்திருக்கிறது. ரக்திபாவத்துடனும், ரஞ்சகம் பொருந்தவும் பாடுவதில் பெருமையுண்டு. நல்ல ராகங்கள் வளர்வதற்குத் தென்னாடுதான் காரணமாக இருந்தது என்பதை நிரூபிக்க இந்த ஆராய்ச்சியினுல் எனக்குத் தைரியம் வருகிறது. நம் சங்கீதத்தில் தேவாரத்திற்கு ஒரு தனி இடம் எப்போதும் உண்டு.

ராகத்தைப் பற்றி நாம் நீண்ட இலக்கணம் வகுக்க முடியும். பண்களைப் பற்றியும் நிறைய ஆராய்ந்து எழுதவேண்டும். லட்சியத்திற்கும், லட்சணத்திற்கும் எப்போதும் முரண்பாடு இருந்து கொண்டே வந்திருக்கிறது. லட்சியத்தை வைத்துத்தான் லட்சணம் என்பதை நம் நாட்டில் தெளிவுபடுத்தி யிருக்கிருர்கள்.

பழங்காலப் பண்களில் ஆகிரி ஒன்ருக அமைந்தது என்று நேற்று முடிவு செய்தோம். இதைக் கண்டு நான் பெருமை யடைகிறேன். தமிழ்ப் பண்ணின் பெருமை இதனுல் நன்கு நிலே நாட்டப் பெறுகின்றது. நாம் செய்த ஆராய்ச்சியால் இந்த வருஷம் நமக்குச் சிறந்த பயன் கிடைத்து விட்டதென்று திட்டமாகச் சொல்லலாம்.

**திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்** :—நம் அரும் பெருந் தலேவர் டாக்டர் திரு. ஆர். கே. சண்முகம் அவர்களேத் தமிழ்இசை யானே என்று கூறலாம். தமிழில் இசையே இல்லே என்று ஒரு சிலர் சொல்லிக் கொண்டிருந்த காலத்திலே நம் ராஜா சர். அண்ணுமலேச் செட்டியார் அவர்களும், டாக்டர் சண்முகம் அவர்களும் 2 பெரிய மைசூர் யானேகளாக முன் வந்து நம் இசைச் செல்வத்தைக் காப்பாற்றிஞர்கள். எதிர்ப்புக்களேத் துவம்சம் செய்து வீறு கொண்டு முன்னேறிய அந்த இரண்டு யானேகளில் ஒன்றை நாம் இழந்து விட்டோம். ஆனல் அதன் பலம் யாவும் இரண்டாவது யானேக்கு வந்து இரட்டிப்புத் திறமையோடு முன்னேறும் வாய்ப்பு அமைந்து விட்டது.

வேதத்தில் குறிப்புக்கள் (Notations) உள்ளன; தேவாரத்தில் குறிப்புக்கள் இல்லே; தேவாரத்தில் சங்கீதம் அழகாக அமைந்திருப்பதனுல் குறிப்புக்கள் தேவையில்லே. அருமையான ஆராய்ச்சிப் பாதையில் நாம் புகுந்து விட்டோம்; இனி எவ்வளவோ புது

மைகளை யெல்லாம் காணப் போகிறோம்; இசை நுணுக்கங்களை யெல்லாம் கண்டு வளர்க்கப் போகிறோம்; இசைத்தமிழ் உன்னத நிலையடையப் போகிறது. இத்தகைய நல்ல பணியில் நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தது குறித்துப் பெருமைகொள்வதோடு மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டத்திற்கு மூலகாரணமாயிருந்து நடத்திய டாக்டர் திரு. ஆர். கே. எஸ். அவர்களுக்கும், ராஜா சர். அவர்களுக்கும், சிதம்பரஞ் செட்டியார் அவர்களுக்கும் மற்றும் இங்கே கூடியுள்ள எல்லோருக்கும் நீண்ட ஆயுளைத் தந்தருளுமாறு கடவுளை வணங்கி முடிக்கிறேன்.

கடைசியாக டாக்டர் திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார், தலைமை தாங்கிய திரு. எம். எம். தண்டபாணி தேசிகர், திரு. பி. ஸாம்பமூர்த்தி ஆகியோருக்கும், ஆராய்ச்சியிற் கலந்து கொண்டவர்களுக்கும், கூட்டத்திற்கு வந்திருந்த மற்றவர்களுக்கும் உளங்கனிந்த நன்றி கூறினர்.

8/9, சிங்கண்ண நாயக்கன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை—1.
20—2—50

லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
செயலாளர், தமிழ் இசை ஆராய்ச்சிக் குழு.

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE, 46, Armenian Street, Madras-1.